මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94) - 11 - 2449823
වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: பிடிஏ/965/1/508
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 11.11.2008

வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 141

அமைச்சுக்களின் செயலாளர்கள்/
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள்/கூட்டுத்தாபனங்கள்,
நியதிச்சட்டசபைகள் மற்றும் அரசாங்க உரிமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

## 2008 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியின் போது அரசாங்க செலவின முகாமை

2008 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியின் போது அரசாங்க செலவினத்தை மிகவும் கண்டிப்பாக முகாமை செய்வதற்கு 2008.11.05 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. அண்மைக்காலமாக உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை காரணமாக அரசாங்க செலவின முகாமையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பினால் எரிபொருள் மற்றும் அத்தியாயசிய உணவுப் பொருட்களின் மீதான தீர்வைகளையும் வரிகளையும் குறிப்பிடத்தக்களவு குறைத்ததினால் அரசாங்க வருமானக் கணக்கில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் உரமானியம் போன்ற அரசாங்க செலவினங்கள் சிலவற்றில் உறப்பட்ட மேலதிகச் செலவினங்கள் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 2008 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியின் போது உறப்படும் அரசாங்க செலவினம் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றது.

(அ) உடனடியாக பயன்பலுப் பெறும் வகையில் இதுவரைக்கும் பெறுப்புக்குள்ளாகாத அனைத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறுத்துதல்.

(ஆ) இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படாதுள்ள அனைத்து நிர்மாணப் பணிகளையும் நிறுத்துவதுடன் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் உள்ளடங்களாக மூலதனப் பொருட்களின் கொள்வனவினையும் நிறுத்துதல்.

(இ) மீண்டெழும் செலவினம் தொடர்பில் மேலதிக கடப்பாடுகள் எதனையும் ஏற்படுத்தாதிருத்தல்.

(ஈ) இந்த வருடத்தின் எஞ்சிய காலப்பகுதியின் இறுதி வரைக்கும் அனைத்துவிதமான பிற மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களினை பிற்போடுதல்.

02. மேற்குறிப்பிட்ட உத்தேச செயற்பாடுகள் தொடர்பில் உங்களது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துமாறு தயவுடன் கேட்கப்படுவதுடன் அரசாங்க செலவின முகாமைத்துவத்திற்கு உங்களது முழுமையான ஒத்துழைப்பை நல்கும்படியும் வேண்டப்படுகின்றீர்கள்.

ஒப்பம் : எஸ்.அபேசிங்க
செயலாளர்
நிதி, திட்டமிடல் அமைச்சு.

பிரதி: கணக்காய்வாளர் நாயகம் -
2008 ஆம் அண்டிற்கான ஒதுக்கீடுகளிலிருந்து சில திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு சேமிப்புக்கள் இடம் பெற்றுள்ளதா என்பதை அவதானிப்பதற்கும் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும்.